# தூய லூர்து அன்னை திருப்பீடம்

தூய லூர்து அன்னை ஆலயம், 50 ஒ.்.பியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி எண் 6294 0624

(முதல் ஆண்டு)

நாள் 05 - 02 - 2017 இதழ் 11

## திருப்பலி நேரங்கள்

**வாரநாட்களில் - ஆங்கிலம்**

| | |
|---|---|
| திங்கள் முதல் வெள்ளி வரை | மதியம் 12:30 மற்றும் மாலை 6:30மணி |
| **சனி** | மாலை 6:00மணி மற்றும் மாலை 7:30மணி |
| **ஞாயிறு (ஆங்)** | காலை 7.30மணி,11.30மணி மற்றும் மதியம் 1:00மணி |
| **ஞாயிறு (தமிழ்)** | காலை 9:30மணி மற்றும் மாலை 6:30மணி |
| **ஞாயிறு (சிங்களம்)** | நண்பகல் 12:00மணி |
| **முதல் ஞாயிறு (மலையாளம்)** | மதியம் 4:00மணி |
| **பொது விடுமுறை** | காலை 9:00மணி (ஆங்) காலை10:00மணி(தமிழ்) |

**சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு** ஆகியவை ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8:00 மணி முதல் 9:00 மணி வரை தமிழில் நமது ஆலயத்தில் நடைபெறுகிறது. செப உதவி தேவைப்படுவோர் கலந்து கொள்ளவும்.

# பொது காலம் 5ஆம் ஞாயிறு

**முதல் வாசகம் :**
எசாயா : 58:7-10

**பதிலுரைப் பாடல் :**
திபா : 112:4-5.6-7.8a,9

**பல்லவி :** ஆண்டவருக்கு அஞ்சுவோர் இருளில் ஒளியென மிளிர்வர்.

**இரண்டாம் வாசகம்:**
1 கொரி 2:1-5

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
அல்லேலூயா, அல்லேலூயா!
உலகின் ஒளி நானே; என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார்; வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியைக் கொண்டிருப்பார். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:** மத்தேயு 5:13-16

## வழிபாட்டு நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| விவிலியப் பகிர்வு | ஞாயிறு | காலை 11:30மணி | (தமிழ்) |
| செபமாலை, லூர்து மாதா நவநாள் | முதல் ஞாயிறு | காலை 8:30மணி | (தமிழ்) |
| மரியாயின் சேனை | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| குழந்தை இயேசு நவநாள் | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| இறை இரக்கச் செபம் | செவ்வாய் | மாலை 5:45மணி | (ஆங்) |
| குழந்தை இயேசு நவநாள் | வியாழன் | மாலை 5:45மணி | (ஆங்) |
| இறை இரக்கச் செபம் | வெள்ளி | மாலை 5:45மணி | (தமிழ்) |
| திருமணி ஆராதனை வழிபாடு தொடர்ந்து திருப்பலி | முதல் வெள்ளி | மாலை 6.30மணி | (ஆங்) |
| திருஇருதய நவநாள் செபம் & திருப்பலி (முதல் வெள்ளி தவிர) | வெள்ளி | மாலை 6:30மணி | (ஆங்) |
| புனித பியோ செபவழிபாடு | மா.தின் 23ம் நாள் | மாலை 8:30மணி | (தமிழ்) |
| சாட்சிய கூடார செபவழிபாடு | முதல் ஞாயிறு | மதியம் 2:00மணி | (தமிழ்) |

**இரண்டாவது காணிக்கை**



இவ்வார இரண்டாவது காணிக்கை புனித வின்சென்ட் தே பவுல் குழுவுக்காக எடுக்கப்படும். உங்கள் காணிக்கைக்கு மிகவும் நன்றி.

**நமது பங்கில் மாதத்தின் ஒவ்வொரு முதல் ஞாயிற்றுக்கிழமையும் தமிழில் திருமணி ஆராதனை வழிபாடு நடைபெறும். இன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.**

**நம் குடும்பங்களை திரு இருதய ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கவும், தேவ அழைத்தலுக்காகவும், உலக அமைதிக்காகவும் செபிக்க, இறைவனின் திருப்பாதத்தில் அமர உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**



## சிந்தனை

பொதுக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறுத் திருப்பலிக் கொண்டாட்டத்தில் பங்கேற்க வந்துள்ள இறைமக்களே! உங்களை அன்புடன், மகிழ்வுடன் வரவேற்கிறோம்.

இன்றைய வாசகங்கள் நம்மைச் சுவையுள்ளவர்களாகவும், அனைவருக்கும் ஒளியாகவும் இருக்க அழைக்கின்றது. திருமுழுக்கின் போது நாம் உவர்ப்புடையவர்களாக உப்பைச் சுவைப்பதின் மூலமாக மாற்றப்படுகிறோம். கடவுளின் அன்பு, அமைதி, மகிழ்ச்சி இன்னும் பல நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பலன் கொடுக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் கடவுளின் வாழ்வான அன்பு, அமைதி, மகிழ்வு அனைத்திற்கும் இன்னும் சுவைக் கூட்டி நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குக் கொடுக்க வேண்டும். உப்பின் உவர்ப்புத் தன்மை மாறினால் அதை என்ன செய்வது என்று இயேசு கேட்கிறார். அதற்குப் பதில் கடவுள் நம்மை மீண்டும் உப்பாகக் கடவுள் மாற்ற நாம் அனுமதிக்க வேண்டும்.

திருமுழுக்கில் நாம் கையில் மெழுகுவர்த்தியைப் பெறும் போது அனைவருக்கும் ஒளியாக இருக்கிறோம். இயேசு நம்மை ஒளியாக இருக்க அழைக்கிறார். அது மற்றவர்களுக்குத் தெரியும்படியாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். மற்றவர்களின் வாழ்வில் இயேசுவின் பிரசன்னத்தைக் கொண்டுவர, நாம் இயேசுவின் ஒளியை நம்மில் ஒளிர விட வேண்டும். இருள் நடுவே நம் ஒளி உதிக்கவேண்டும். நற்செயல்களால் கடவுளுடன் இணைந்திடுவோம். இவரின் ஞானத்தையும் வல்லமையையும் பெற்றிட இத்திருப்பலியில் உப்பாய் ஒளியாய் கலந்திடுவோம் வாரீர்.

# தூய லூர்து அன்னை ஆலயம் திருவிழா 2017

CHURCH OF OUR LADY OF LOURDES

நம் பங்கின் பாதுகாவலியாம் தூய லூர்து அன்னையின் ஆண்டுப் பெருவிழா பிப்ரவரி மாதம் 2 தேதி முதல் 11ஆம் தேதிவரை வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட இருக்கின்றது.

நவநாட்கள் : 02-02-2017 - 10-02-2017

வாரநாட்களில் : மாலை 6.30மணிக்கு செபமாலை;
மாலை 7.00மணிக்கு திருப்பலி

பிப்ரவரி 08, 09 மற்றும் 10 (புதன், வியாழன் மற்றும் வெள்ளி) ஆகிய 3 நாட்களில் இரவு 8.30 மணிக்கு தமிழ் திருப்பலி நடைபெறும்

11-02-2017, சனிக்கிழமை மாலை 6.30மணிக்கு திருவிழா திருப்பலி
தலைமை : பேராயர் வில்லியம் கோ
சிங்கப்பூர் உயர்மறைமாவட்ட பேராயர்.

அதனைத் தொடர்ந்து அன்னையின் திருஉருவம் தாங்கிய தேர் பவனி நடைப்பெறும் அனைவரும் வருக! அன்னையின் இறை ஆசீர் பெருக!

குறிப்பு : ஆண்டுப் பெருவிழாவை சிறப்பாகக் கொண்டாட நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. நன்கொடை தரவிரும்புவோர் பங்கு அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுகொள்ளும்படியாக அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

**விவிலியப் பகிர்வு குழு ஆராதனை வழிபாடு**



நாள்: இன்று, 05 - 02 - 2017
நேரம்: காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை
இடம்: புனித பெர்னதெத் அறை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**

புனித லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

# சிங்கப்பூர் உயர் மறைமாவட்டம்
# தமிழ் திருப்பலி நடைபெறும் நேரங்களும் இடங்களும்

| | | |
|---|---|---|
| புனித லூர்து அன்னை ஆலயம்<br>50 ஓபியர் ரோடு | : | ஞாயிறு காலை 9.30<br>ஞாயிறு மாலை 6.30<br>பொது விடுமுறை நாட்கள் காலை 10.00 |
| உயிர்த்த ஆண்டவர் ஆலயம்<br>91 தோ பா யோ சென்ட்ரல் | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மதியம் 4.00 |
| புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம்<br>200 பூன் லே அவின்யூ | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் ஐந்தாவது ஞாயிறு மாலை 7.30 |
| புனித அந்தோணியார் ஆலயம்<br>25 உட்லாண்ட்ஸ் அவின்யூ 1 | : | மாதத்தின் முதல் சனி மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது சனி மாலை 7.30 |
| நற்கருணை ஆலயம்<br>1, காமன்வெல்த் டிரைவ் | : | மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.00 |
| நட்சத்திர மாதா ஆலயம்<br>10, ஈசூன் 22வது தெரு | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 6.30<br>மாதத்தின் மூன்றாவது சனி மாலை 6.30 |
| கிறிஸ்து அரசர் ஆலயம்<br>2221, அங் மோ கியோ அவின்யூ 8 | : | மாதத்தின் நான்காவது ஞாயிறு மாலை 6.30 |
| சம்மனசுகளின் இராக்கினி ஆலயம்<br>5, புக்கிட் பாதோக் அவின்யூ 2 | : | மாதத்தின் நான்காவது சனி மாலை 8.00 |

### அருள்தந்தையர்

அருள்தந்தை மைக்கேல் சீத்தாராம் - பங்குத்தந்தை
அருள்தந்தை தே. நித்திய சகாயராஜ் (nithiya@catholic.org.sg) - உதவிப் பங்குத்தந்தை
அருள்தந்தை அந்தோணி மரிய ஜோசப் (antony.m.joseph@catholic.org.sg) - உதவித் தந்தை & Spiritual Director to the Archdiocesan Commission for the Apostolate of Tamil-Speaking (ACTS)

### பங்கு அலுவலகம்

(ololsec@gmail.com)
இணையதள முகவரி: http://www.tamilcatholic.org.sg; http://facebook.com/ChurchOfOurLadyOfLourdesSingapore

அன்புப் பங்குமக்களே! தாங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே உங்கள் கைத் தொலைபேசியை அணைத்து வைக்குமாறும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.